# பிறப்பிக்கப்பட்டதா? பிரிக்கப்பட்டதா?

**கரவையூர்ச் செல்வம்**
B.A., Dip. Etu., M. S., M.S., D. Psy.
Fully Certified Clinical Supervisor,
A member of the American Association of Pastoral Councelors.

## முன்னுரை

துறவறசபைகள் மறை மாவட்டவையாக (Diocesean) இருந்தாலும் சரி, அனைத்துல மயமானவையாக இருந்தாலும் சரி, மாகாணங்களாக (provinces) வகுக்கப்பட்டுக் காலாகாலமாக இயங்கி வருகின்றன. இந்த வகுப்பு முறை நிர்வாக வசதி நோக்கியும் மேய்ப்புப் பணித்திறனை நோக்கியுமே நடைபெறுவது. ஒரு மாகாணம் பெரிதாக வளர்ந்து, விரிந்து, பெரிய நிலப்பரப்பை உள்வாங்கி, பொருளாதாரத்திலும் தன்னிறைவு காணும்பொழுது, மீண்டும் நிர்வாக நலன் நோக்கியும், மேய்ப்புப்பணி சிறப்பிற்காகவும் இன்னோர் மாகாணத்தைப் பிறப்பிக்கின்றது (Birthing). தாய் மாகாணம் சேய் மாகாணத்தைப் பெற்றெடுக்கின்றது, அல்லது பிறப்பிக்கின்றது என்று உருவகத்தில் கூறலாம்.

இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், சேசு சபையினர் கிட்டத்தட்ட 17 மாகாணங்களாகத் தம்மைப் பிறப்பித்துள்ளனர். அதேபோன்று, சலேசியன் சபையும் பதின்னான்கு மாகாணங்களாகப் பிறப்பித்து நிர்வகித்து வருகின்றது. சில ஆண், பெண் துறவற சபைகள் இவ்வாறு மாகாணங்களைப் பிறப்பித்து இயங்குவது கண்கூடு.

இதில் ஒரு விசித்திரமான நிகழ்வைக் குறிப்பிட வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்க நாடுகளிலும் ஏற்கனவே பல மாகாணங்களாக இயங்கி வந்து, ஆள்பலம் குறைந்த காரணத்தினாலும், பொருளாதாரப் பிரச்சினைகளாலும் இன்று ஒரு மாகாணமாகக் குறைக்கப்பட்டிருப்பது பரிதாப

நிலை! நாம் வளர, அவர்கள் குன்றிக் குறைகின்றார்கள். இருப்பினும், இன்னமும் எங்களை அடக்கி ஆள முயல்கின்றார்கள்! சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அடக்கி ஆட்சி செய்தது தென்ஆபிரிக்காவின் நீண்ட ஒடுக்கு முறை வரலாறு.

**ஒரு மாகாணம்**

சிலோன் (Ceylon) என்ற பெயரில் அன்று அழைக்கப்பட்ட இந்நாட்டில், அமலமரித் தியாகிகள், ஒரு மாகாணமாக இயங்கி வந்தார்கள். ஒரு கட்டத்தில் – 1970களிலும், 80களிலும் ஆட்பலத்தில் 300றைத் தாண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் (மன்னார், அனுராதபுரம் உட்பட) போன்ற மறைமாவட்டங்களில் பல பங்குகளை, கல்லூரிகளை, சில தொழில்நுட்ப நிறுவனங் களை, குருத்துவக் கல்லூரிகளை, அநாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லங்களை நிர்வகித்து வந்தார்கள். இந்நாட்டில் மிகப் பெரிய துறவறசபையாகக் கொடி கட்டிப் பறந்தார்கள் என்று சொல்லலாம்.

இருப்பினும், பெரும்பான்மையான கட்டிடங்களும், பணித்தளங்களும், தேயிலை தென்னந் தோட்டங்களும் தெற்கில் வளர்ந்தது போல வடக்கில் வளரவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு யாழ். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. அவர்கள், கொழும்புத்துறையில் ஒரு சிறிய வீட்டோடு ஒரு நிலத்தை அமதிகளுக்கு வழங்கினார். அப்பொழுது அமதிகளிடையே பரவலாகப் பேசப்பட்ட விடயம் ஒன்று! அருள்திரு பொமிக்கோ அ.ம.தி. அவர்கள் போலந்து நாட்டிலிருந்து இலங்கை வந்து யாழ். மறைவட்டத்துப் பல பங்குகளில் பணி புரிந்தவர். இவர், யாழ். ஆயரிடம் தமிழில் கூறிய வார்த்தைகள்: "இவ்வளவு காலமாகப் பங்குகள் தோறும், கல்லூரிகள் தோறும் பணிபுரிந்த அமதிகளுக்கு நீர் கொடுத்தது ஒரு 'கக்கூஸ்'. அவரால்தான் இவ்வாறு சொல்லமுடியும். 'கக்கூஸ்' என்ற சொல்லை ஏன் பயன்படுத்தினார்? கொழும்புத்துறை கடலோரமாக யாழ்

மறைவட்டம், முதியோருக்கென ஓர் இல்லத்தை அமைத்து, அருட்சகோதரிகளின் துணையோடு நிர்வகித்து வந்தது. இந்த இல்லத்தின் ஓர் ஓரமாக (இடது பக்கமாக) முதியோருக்கென கழிப்பிடங்கள் கட்டப்பட்டிருந்தன. இதன் ஓரமாகவே யாழ். ஆயர் அமதிகளுக்கு ஒரு நிலம் தந்திருந்தார். அக்காலத்தில் கழிப்பிடங்களைக் 'கக்கூஸ்' என்று சொல்வது வழக்கத்தில் இருந்தது. இச்சொல் எங்கிருந்து வந்தது?

## 'கக்கூஸின்' வரலாறு!

ஒரு கோடைகாலப் பயிற்சிக்காக, நான் ஆங்கில நாட்டில் உள்ள சென். அன்செல்ம்ஸ் இல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தேன். அப்பொழுது, இலண்டனில் இயங்கிவந்த மில் கில் குருக்கள் (Mill Hill Fathers) அவர்களிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது. அவர்களுடைய பொதுச்சங்கத்திற்கு முன்னோடியாக ஒரு வார இறுதியில் இரண்டுநாள் கருத்தரங்கை நடத்துமாறு கேட்கப்பட்டேன். அச்சங்கத்திற்கு வந்திருந்தோர் பெரும்பாலும் ஐரோப்பியர். மதிய உணவிற்குப் பந்தி அமர்ந்த பொழுது, எனதருகில் இருந்த ஒல்லாந்து தேசத்தவர் (Holland) என்னை வினவினார்: "நீர் எந்த நாட்டில் இருந்து வருகின்றீர்?" "ஸ்ரீலங்கா", எனப் பதில். "தெற்கா? வடக்கா?" "வடக்கு", உடனேயே அவர் சொல்லிய வார்த்தை, "கக்கூஸ்!"

வியந்து போனேன்! என்னுள் நினைத்தேன்: ஒருவேளை இவர் வடக்கு வந்து சென்றவரோ?' எனது வியப்பைப் பார்த்து அவர் கூறினார், கக்கூஸ் என்ற சொல் டச் (Dutch) மொழியில் உள்ள ஒரு கொச்சைப்படுத்தப்பட்ட (slang) சொல். எனக்குள் சொல்லிக் கொண்டேன். 'பறவாயில்லையே! எங்கள் 'கக்கூஸ்' ஒல்லாந்திலிருந்து வடக்கே இறக்குமதியாயிற்றே!

## தெற்கில் வளர்ச்சி வடக்கில் வறட்சி!

வடக்கே (மன்னார் உட்பட) பணிபுரிந்த அமதிகளுக்கு சொந்தமான ஒரு நிலம் ஒரு வீடென்றால் இதுவொன்றே

(அமலோற்பவம்). ஒரு மாகாணமாக செயற்பாட்டாலும், வடபகுதி தென்பகுதி போன்று வளரவில்லை. பங்குதோறும், கல்லூரிகள்தோறும் பணிபுரிந்த அமதிகள் யாழ். ஆயர் இல்லம் வந்து செல்வார்களேயொழிய அவர்கள் வந்து கூடுவதற்கு அவர்களுக்கு ஓர் இடமில்லை. இக்குறைபாட்டைப் பின்னர் யாழ். அமதிகள் வெளியே எடுத்துரைத்துள்ளனர்.

குறைகூறுவதற்காக நான் இவற்றை எழுதவில்லை. அந்த அவசியமும் எனக்கில்லை. ஆனால், இன்று வடகிழக்கில் பணிபுரியும் வடமாகாண அமதிகளும் இவர்களைத் தொடர்ந்து வரும் அமதிகளும் தங்கள் "அமதி வேர்களை" அறிந்திருப்பது அவசியமென இந்த மலர்க் குழுவினர் விரும்பினார்கள். எனக்கும் அது உடன்பாடாக இருந்தது. அதனால் எழுதுகின்றேன்.

வரலாற்றில் பதியாது, வாய் வழி வரலாற்று நிகழ்வு களைச் சொல்லி வந்தாலும், கண்ணால் கண்டவர்களும் காதால் கேள்வியுற்றவர்களும், அனுபவித்தவர்களும் இல்லாது போகும் காலத்தில், வரலாற்று நிகழ்வுகள் திரிவுபட இடமுண்டு.

அமலமரித் தியாகிகள் பணிபுரிந்த வடபகுதியில், அவர்களுக்கென பங்குகளோ, கல்லூரிகளோ, வேறெந்தப் பணித்தளங்களோ அமைக்கப்படாதது இந்த நாட்டில் ஒன்றும் புதிதல்ல. இலங்கை ஒரு நாடாக இருப்பினும், ஓர் அரசின் கீழ் நிர்வகிக்கப்பட்டாலும், முன்னேற்றங்கள், புதிய தொழில் துறைகள் அத்தனையும் தென் பகுதியிலேயே இடம் பெற்றன. வடகிழக்குப் பகுதிகள் முற்றாகக் கைவிடப்பட்டன. 'தமிழ்த் தேசியம்' என்ற குரல் எழும்ப இதுவும் ஒரு காரணம். அதே பாணியில்தான் அமதிகளும் செயற்பட்டனர். இவ்விடத்தே இன்னுமோர் விடயத்தையும் குறிப்பிடல் வேண்டும். யாழ். மறைவட்டத்தில் பல்லாண்டுகள் பணிபுரிந்து பங்குகளையும், கல்லூரிகளையும் கட்டி எழுப்பிய அமதிகளுக்கு இதுவரை எந்த யாழ். ஆயரும் ஒரு பங்குத் தளத்தையோ கல்லூரியையோ நிர்வகிக்கும் பொறுப்பை அளிக்கவில்லையென்ற ஓர் ஆதங்கம்

யாழ். மாகாண அமதிகள் சிலருக்கு இன்னமும் உண்டு. இதன் பின்னணியில், யாழ். மாவட்டத்தில் எமக்கு பணி இல்லையா? என்ற ஒரு விரக்தியும் உண்டு. எனது பதில்: கண்ணதாசனின் பாட்டு: "போனால் போகட்டும் போடா! வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இப்பூமியில் எமக்கு இடமேது?" அமதிகள் முதல்வரியையும், மறைமாவட்டக் குருக்கள் இரண்டாவது வரியையும் பாடுங்கள். கண்ணதாசன் எம்மைப் பற்றித்தான் பாடுகின்றார் என்று தோன்றும்.!

## இனவெறியின் தொடக்கம்

ஆங்கில நாட்டு மிகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்வோல்ட் (Oxford) பல்கலைகழகத்தில் உயர்கல்வி கற்று நாடுதிரும்பிய சொலமொன் வெஸ்ட் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்க இந்நாட்டின் பிரதமராக வர விரும்பி, அதற்கு ஒரு குறுக்கு வழியைக் கையாண்டார். யூ.என்.பி. (UNP) யில் தொடர்ந்திருந்தால் பிரதமராக வருவதற்குக் காலமெடுக்கும் என்று எண்ணிய பண்டா, அக்கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தது மட்டுமல்லாமல், 24 மணித்தியாலத்துக்குள் சிங்களம் மட்டுமென்ற இனவெறியை வித்திட்டு வளர்த்தார். இவர் ஒரு அங்கிலிக்கன் சபைக் கிறீத்தவனாக இருந்தும் (அவரது முழுப் பெயரையும் மேலே தந்துள்ளேன் பெயர்களில் மேல்நாட்டுக் கிறீத்தவ வாடை தெளிவாகத் தோன்றுகின்றது), அரசியலுக்காக சமயத்தை மாற்றி, பெற்ற கல்வியை நாய்க்கெறிந்துவிட்டு பௌத்த குருக்களுடன் கைகோர்த்தார். இந்நாட்டில், பௌத்த சிங்கள வெறியை வித்திட்டு வளர்த்தவர்தான், இந்த பண்டா.

'கல்வி கயமையை வளர்க்கின்றது' என்று எனது தமிழ்ப் பேராசிரியர் கா.போ.அறவாணன் அவர்கள் 1968களில் கூறியதை, பண்டாரநாயக்கா 1956லேயே நடைமுறைப்படுத்தினார். இவரது வளர்ப்பு, சமயம், கல்வி அனைத்தும் இவரை ஒரு பண்பாளராக வளர்க்காமல் அரசியல் பதவிக்காக ஓர் இனத் துவேஷ

னாக மாற்றியது. இவர் 1956ல் வித்திட்ட இனத்துவேஷம், கத்தோலிக்க சமயத்திலும் பல துறவற சபைகளிலும் வேரூன்றி வளர ஆரம்பித்தது, இந்த நாட்டின் துர்அதிர்ஷ்டம்.

**பயங்கரவாதம்**

தமிழின அழிப்பின் திட்டவட்டமான திட்டமிடப்பட்ட முதற்படி ஆனி 1958இல் நடைபெற்றது. இதை ஆரம்பித்து வைத்தவர் பிரதமராகிய பண்டா. இவருக்கு உறுதுணையாக இருந்தவர் அன்று கவர்னராகப் பதவிவகித்த ஒலிவர் குணதிலக்க. தெற்கில் வாழ்ந்த தமிழர் கொல்லப்பட்டார்கள். அவர்களின் உடைமைகள் களவாடப்பட்டன. அவர்களின் வீடுகளும் கடைகளும் எரியூட்டப்பட்டன. எவ்வளவு கேவலமாக, மிருகத்தனமாக (மன்னிக்கவும். திட்டமிட்டு ஓர் இனத்தை மிருகங்கள் அழிக்க முற்பட்டதாக எப்பதிவும் இல்லை), எவ்வளவு கொடூரமாகக் கொலையுண்டார்களென்பதையும் அதைப் பார்த்துக் கொண்டு நின்ற பண்டாவைப் பற்றியும் அறிய விரும்பினால் ரார்ஸி வித்தாச்சி Emergency’58 என்ற தலைப்பில் எழுதிய நூலைப் படிக்கவும்.

இந்நாட்டில் இந்நூலை வெளியிட முடியாமல், இலண்டன் சென்று அங்கிருந்து தனது நூலை வெளியிட்டார். அப்பொழுது Observer என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிவந்த ஊடகவியலாளர்தான், ரார்ஸி வித்தாச்சி.

இனப்படுகொலை நடக்கவில்லை, பயங்கர வாதத்திற் கெதிரான போர்தான் 2019இல் நடந்ததென்ற தென்னகச் சிங்கள பௌத்த கத்தோலிக்க ஆயர் மன்றப் பேச்சாளரும், ஆயர் மன்றமும் கட்டாயமாகப் படிக்க வேண்டிய நூல், Emergency’58. அந்த இனஅழிப்பின்பொழுது ஆயர்கள் கூறும் பயங்கரவாதமோ, தமிழர் கூறும் விடுதலைப் போராட்டமோ இருக்கவில்லை. ஒரு தமிழனாவது அல்லது தமிழச்சியாவது காடையர்களில் எவரையும், அன்றேல் வேடிக்கை பார்த்து நின்ற

அரச படையினர் எவரையும் திருப்பி அடித்ததாகப் பதிவெதுவும் இல்லை. இது அரச பயங்கரவாதம்.

வரலாற்று நிகழ்வுகள் சத்தியமானவை. சுய இலாபங்களுக்காகவும், சிங்கள பௌத்த அரசுகளைக் காப்பாற்றுவதற்காகவும் அவற்றை மறுப்பதும் மறைப்பதும் பாரிய பொய்யாகும். கொலை குற்றமென்றால் அதை மறைப்பதும் குற்றமாகும்.

## விதைத்தவன் அறுத்தான்

வினை விதைத்தவன் வினை அறுப்பான். பண்டா விதைத்தான்: அறுத்தான். எந்த பௌத்த தேரர்களைப் பயன்படுத்தி பௌத்த சிங்கள கோஷத்தை வெளிப்படையாகப் பரப்பிப் பிரதமராக வந்தாரோ, அதே பௌத்த தேரர் இனமே நேருக்கு நேராக நின்று (point blank) துப்பாக்கியால் பண்டாவைச் சுட்டுக் கொன்றார்கள். பௌத்த சிங்கள வெறிபிடித்த ஏல்டுவே சோமராம தேரர்தான், புரட்டாசி 15ம் நாள் 1959ஆம் ஆண்டில் பண்டாவைச் சுட்டுக் கொலை செய்தார்.

பண்டா கொலையுண்டார் என்ற செய்தி மறுநாள் நாளேடுகளில் அச்சேறி வரமுன்னரேயே, தமிழனொருவன்தான் பண்டாவைச் சுட்டுக் கொன்றதாக ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் கொழும்பு நகர் பூராகவும் விநியோகிக்கப் பட்டன. இன்னோர் இனப்படுகொலை நடக்கலாமென எண்ணி அஞ்சி தமிழர் வீடுகளுக்குள்ளேயே தங்களை சிறைப்படுத்திக் கொண்டனர். அன்று அவர்களைக் காப்பாற்றியது, மறுநாள் பிரசுரமான நாளேடுகள்.

சோமராம தேரர் ஒரு தனியாளாக நின்று இக் கொலையைச் செய்யவில்லை. இவருக்குப் பின்னால் நின்று இவரை இயக்கிய ஒரு பெரிய புள்ளி தேரர்களிடையே செல்வாக்குப் பெற்றவரும், அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவரும், ராஜாக்களை உருவாக்குபவருமான (King-

maker). வணிக ஈடுபாடுகளில் பணத்தைப் பெருக்கியவருமான மாபித்தகம புத்திரகித்த தேரர்.

பண்டாவைத் தொடர்ந்து இடைக்காலப் பிரதமராகிய தகநாயக்காவும், அவரைத் தொடர்ந்து கணவனின் கொலையை மேடை தோறும் சொல்லி அழுது மக்களின் அனுதாபத்தைப் பெற்று தேர்தலில் வெற்றிபெற்றுப் பிரதமரான பண்டாவின் மனைவி சிறிமாவோ அவர்களும் பண்டாவின் கொலைக்குக் காரணமானவர்களை இனங்கண்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று தீவிரமாகச் செயற்பட்டனர்.

சோமராம தேரரும், புத்தரகித்த தேரரும் கொலைக் குற்றவாளிகள் என்று நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு தூக்குத் தண்டனைக்கு உட்பட்டார்கள். ஆயினும், அவசர அவசரமாக இயற்றப்பட்ட சட்டத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தி புத்தரகித்த ஆயுள் தண்டனை பெற்றார்.

சிறையில் தனித்துவிடப்பட்ட சோமராமாவை ஓர் அங்கிலிக்கன் சபைக் குருவானவர் அடிக்கடி சந்தித்து, அவருக்கு ஆறுதலாகவும், சிறு சிறு உதவிகளையும் செய்து வந்தார். கிறீத்தவத்தைப் பற்றிய அறிவைப் பெற்று, தன்னைச் சந்தித்த குரவரின் கருணையுள்ளத்தைப் பார்த்து, தூக்குமேடை செல்ல முன்னர் சோமராம சமயம் மாறி, மனம் மாறித் திருமுழுக்குப் பெற்றுப் பீற்றர் என்ற பெயருடன் 07.07.1962ல் தூக்கில் தொங்கினார். பண்டா கிறீத்தவத்தை மறுத்து பௌத்த வேஷம் பூண்டு பிரதமராகி கொலையுண்டான். இவரைக் கொலை செய்த பௌத்த தேரர் சோமராம மனம்மாறி கிறீத்தவனானார். என்ன முரண்பாடு. இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு எந்த நாட்டிலும் நடைபெற்றதாக நான் அறியவில்லை.

புத்தரகித்த ஏழரை ஆண்டுகள் கடூழியச் சிறையில் இருந்து, இதய நோயினால் இறந்தார். சிறைச்சாலையில் அளவுக்கு மீறி உட்கொண்ட உணவு ஒரு காரணமென்று வாய்கூசாது அன்றைய சிறை அதிகாரி அறிக்கைவிட்டார்.

இவருக்கு, அதுவும் கடுழியச் சிறையில் அளவுக்கு மீறி உணவு கொடுத்தது யார்? விசாரிக்கப்படவில்லை.

ஒரு விடயம்: 1959ம் ஆண்டில் செய்த கொலைக்கு மூன்று ஆண்டுகளில் தீர்ப்பளிக்கப்பட்டது. இன்று வருடங்கள் பல ஓடியும் எத்தனையோ கொலைக் குற்றங்கள் நீதிமன்றம் செல்லவில்லை. எச்சரிக்கை: பௌத்த தேரர்களுக்கு முன்னால் நேருக்கு நேராக நின்று மூன்றாக, நாலாக மடிந்து வணக்கம் செலுத்தும் அரசியல்வாதிகளே, உள்நாட்டு வெளிநாட்டுப் பிரமுகர்களே, ஆயர்களே எப்பொழுது என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது. ஒரு முகமூடி இன்னோர் முகமூடியை நேருக்கு நேராகச் சந்திக்கும் பொழுது, புறத்தில் முகமூடிகள்தான் சந்திக்கின்றன. ஆனால், இந்த முகமூடிகளின் பின்னிருக்கும் பாம்பின் கால் பாம்புக்குத்தான் தெரியும். பண்டாவின் கொலை உலகிற்குச் சொல்லும் செய்தி இதுதான்.

## அன்றும் இன்றும்

இன்று, பௌத்த தேரர்கள் போதை உட்கொள்வதும், போதைப் பொருள் கடத்துவதும், தாய்லாந்து சென்று கேவலமான நடத்தையில் ஈடுபடுவதும், குழந்தைகளைப் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்குவதும், இனத் துவேஷ அரசியலில் பகிரங்கமாக ஈடுபடுவதும் நாடறிந்த செய்தி. இதற்கு 1950களிலேயே அந்தக் காலத்துத் தேரர் சிலர் வித்திட்டுள்ளார்கள். அன்று சட்டம் தண்டித்தது. இன்று சட்டம் வளைகின்றது. ஜனாதிபதியே சட்டத்தை வளைக்கின்றார். ஒரு மார்க்சீயவாதி (J.V.P) படுகுற்றம் செய்த தேரர்களை காப்பாற்ற முனைகின்றார் என்றால், எங்கோ, ஏதோ பாரதூரமாகத் தோப்புக்கரணம் போட்டுவிட்டது!

பண்டா பிரதமராகிய குறுகிய காலத்திலேயே செத்து விட்டார். ஆனால், அவர் விதைத்த இன, சமயப் பாகுபாடு, துவேஷம் அவருடன் சாகவில்லை. மாறாக, வளர்ந்து நாடு

பூராகப் பரவியது. பல பௌத்த சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த தேரர்கள், படித்துப் பட்டம் பெற்ற பதவி மோகம் கொண்டோர் இனத்துவேஷத்தை வளர்த்தார்கள். இத்துவேஷம் கத்தோலிக்க அவையின்னுள்ளும், துறவற சபைகளினுள்ளும் (அமலமரித் தியாகிகள் அதற்கு விதிவிலக்கல்ல) பரவியது. அம்பிட்டியாவில் உள்ள குருத்துவக் கல்லூரியிலும் (Oblate scholasticate) ஏழு வருடங்கள் வாழ்ந்தபொழுது, இந்த இனத்துவேஷத்தை நன்கு அவதானித்தேன். குருத்துவப் பயிற்சி கொடுப்போரிடையேயும் இனப்பாகுபாடு இருந்தது. நாடே பிரிவை நோக்கி வளர்ந்தது. வளர்கின்றது.

## பிரிவின் தோற்றங்கள்

அமலமரித்தியாகிகளின் ஒரு முக்கிய பணி, பங்குகள் தோறும் சென்று மகா ஞானொடுக்கங்கள் நடத்துவது (Grand mission). இவ்வேளைகளில், பங்குகளில் உள்ள வீடுகளைச் சந்திப்பது மக்களின் பிரச்சனைகளுக்கு செவிமடுத்து அவர்களே தீர்வு காண உதவுவது போன்ற வெவ்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்துவார்கள். இப்பெரும் பணிக்கு சில குருக்களைத் தெரிவு செய்து, இவர்கள் (சிங்களமும், தமிழும்) வென்னப்புவாவில் ஒரு குழுமமாக வாழ்ந்து, சிங்களக் குருக்கள் சிங்களம் பேசும் பங்குகளுக்கும், தமிழ்க் குருக்கள் தமிழ்ப் பேசும் பங்குகளுக்கும் சென்று இப்பணியை நாடுபூராக விரித்திருந்தார்கள். ஆடி, ஆவணி மடுப் பெருநாள்களுக்கு இரு சாராரும் ஒன்றாகச் சென்று, மறையுரைகளைப் பகிர்ந்தெடுத்துப் பணிபுரிந்து விட்டுத் திரும்புவார்கள். இன ஒற்றுமைக்குச் சான்றாக வாழ்ந்தார்கள். அக்காலத்தில் பயணங்கள் செய்வது கடினம். இந்த மறைஉரைஞர்கள் பொது வாகனங்களிலேயே பயணம் செய்து வந்தார்கள்.

தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையும் வடகிழக்கில் இருந்தமையினாலும், பயணங்களைக் குறைப்பதற்காகவும் தமிழ் பேசும் அமதிகள் கொழும்புத்துறையில் அமதிகளின்

நிலமொன்றில் வலது ஓரமாக பெரிய வசதிகள் இல்லாத ஒரு கட்டிடத்தில் குடியேறினார்கள். இந்தக் கட்டுரையின் ஆசிரியரும் *1968* இல் ஒரு வருடம் அவ்வீட்டில் குடியேறி பணிபுரிந்தவர். அப்பொழுது இக்குழுவிற்குத் தலைமை தாங்கியவர் Z. N. குரூஸ் அ.ம.தி. அவர்கள். இவர் பலராலும் பாராட்டப்பட்ட பண்புள்ள ஒரு மனிதர். இது, ஒரு மொழிவாரியான பிரிவு. நியாயப்படுத்தக்கூடியது. ஆயினும், தெரிந்தோ தெரியாமலோ பின்னர் வரவிருக்கும் பெரிய பிரிவுக்கு இது ஒரு முதற்படியாக அமைந்தது என்று பின்நோக்கிப் பார்த்துக் கூறுகின்றேன்.

## (2) இரண்டாவது தோற்றம்

*1956*ஆம் ஆண்டில், சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை இந்த நாட்டில் பண்டா திணித்தான். இது, மாணவ மாணவியரின் (சிங்களம் + தமிழ்) கல்வியை வெகுவாகப் பாதித்தது. ஒரு வரலாற்றுத் தவறு. இணைமொழியாக இருந்த ஆங்கிலம் வழக்கில் குறைந்தது. பண்டாவின் பிள்ளைகளும், பல அரசியல்வாதிகளுடைய பிள்ளைகளும் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆங்கிலத்தில் கல்வி கற்றபொழுது, சாதாரண பிள்ளைகள் தமிழ், சிங்கள மொழிகளில் கல்வி கற்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கல்வித் தரம் வெகுவாகக் குறைந்தது.

நுகேகொடையில் உள்ள கொகுவளையில் அமதிகளின் சிறிய குருமடம் அமைந்திருந்தது. சிங்களத் தமிழ் மாணவர்கள் ஒன்றாக வாழ்ந்து, பம்பலப்பிட்டியாவில் உள்ள புனித பீற்றேர்ஸ் கல்லூரியில் தங்கள் கல்வியை மேற்கொண்டு வந்தார்கள். இந்த நிலை மாறியது. தமிழ் மாணவர்களுக்கு வசதியான கல்லூரிகள் யாழ்ப்பாணத்தில்தான் உண்டென நினைத்த அமதிகள், தமிழ் மாணவர்களை கொழும்புத்துறை புனித வளனார் பெயரில் குருமடத்தை உருவாக்கி, அங்கே தங்கி, யாழ். கல்லூரிகளில் கல்வியைத் தொடரப் பணித்தார்கள். மீண்டும் தெரிந்தோ தெரியாமலோ மொழி வாரியான பிரிவொன்று இடம்பெற்றது.

பின்னோக்கிப் பார்த்து, இப்பிரிவை பின்னர் வரவிருக்கும் பாரிய பிரிவின் இரண்டாவது தோற்றமெனப் பார்க்கின்றேன்.

## பொதுக்கூட்டம்

1982ம் ஆண்டு, ஆடித் திங்கள் 18 – 24 திகதிகளில் கண்டி (அம்பிட்டியா)வில் உள்ள தேசியக் குருமடத்தில் அமலமரித்தியாகிகள் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினார்கள். இந்த அவையில்தான் முதன்முதலாக வடக்கே வாழ்ந்த அமலமரித்தியாகிகள் தமிழ் அமதிகளுக்கு வடகிழக்கே ஒரு மாகாணம் தேவையென்ற குரல் எழுப்பினார்கள். அவையில் வரவேற்பிருந்ததாகச் சொல்வதற்கில்லை. மாறாக, கிசு கிசுப்புக்கள், எதிரொலிகள், ஏன் கோபங்கள் கூட வெளிப் படுத்தப்பட்டன. பல இழுபறிகளின் பின்னர், 08.12.1984 இல் யாழில் அமதிகள் ஒரு பொதுப் பிரதிநிதிகள் குழுவாக (General delication) செயற்படலாமெனப் பிரகடனப் படுத்தப்பட்டது. இது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு. மாகாணமாக முன்னர், பிரிவுக்கு இப்பிரகடனம் மூன்றாவது படியெனத் துணியலாம்.

## மதில் மேல் பூனை

வடபகுதி அமதிகள் திருப்திப்படவில்லை. 1984ம் ஆண்டில் ஸ்ரீலங்கா அமதிகளின் மாகாண முதல்வராக, அருட்திரு. அன்சலம்ஸ் அ.ம.தி தெரிவு செய்யப்பட்டார். யாழில் உள்ள அமலமரித்தியாகிகளின் வருடாந்த ஞானொடுக்கத்தை பண்டதரிப்பு தியான இல்லத்தில் நடத்துவதாகத் திட்டமிடப் பட்டிருந்தது. 1983 இல் வெடித்த இனப்போர் மெதுவாக உக்கிரமடையத் தொடங்கிய காலம். ஆயினும் A9 பாதை மூடப்படவில்லை. ஆங்காங்கே ஸ்ரீலங்காப் படையினர் சில சோதனைச் சாவடிகளை நிறுவியிருந்தனர். மாகாண முதல்வர் பயத்தினால் வடக்கே வருவதை நிறுத்திவிட்டார். இவர் யாருக்குப் பயந்தார்? புலிகள் என்ற பெயரில் விடுதலை வீரர்கள் இன்னமும் நேரடிப் போரில் ஈடுபடவில்லை. கொறில்லாப் போர்தான் நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீலங்காவின்

படையினருக்குப் பயந்தாரா? அல்லது, வடக்கே மிகவும் அதிருப்தியுடன் வாழ்ந்த அமதிகளுக்குப் பயந்தாரா? மாகாண முதல்வர் தனது பயத்தைத் தெளிவாக்கவில்லை.

இதுவரை ஸ்ரீலங்கா மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமென்று வடக்கே வாழ்ந்த அமதிகள் குரல்கொடுத்து வந்தாலும், அமதிகளின் மூத்த குருக்கள் பெரிதாக ஆதரவு தரவில்லை. எதிர்க்கவும் இல்லை. அவர்கள் மதில் மேல் பூனையாக நின்று மௌனித்திருந்தார்கள். இந்த நிகழ்வுடன் அதாவது மாகாண முதல்வர் வடக்கே வர மறுத்தமை அவர்கள் முடிவெடுக்கத் தூண்டியது. எந்தப் பக்கம் பாய்வதென்று முடிவு செய்தது மட்டுமன்றி, எதிர்ப்புக் கொடியையும் தூக்கினார்கள்.

மூத்த குருக்கள் சொன்னார்கள்: ஒரு மாகாண முதல்வர் தனது நிர்வாகத்துக்குட்பட்ட குருக்களைச் சந்திக்கப் பயந்து அவர்களைக் கைவிட்டமை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயன் ஆடுகளை விட்டு ஓடிவிட்டானா? மாகாணப் பிரிவுக்கு இந்த நிகழ்வு ஒரு தீர்க்கமான முடிவாயிற்று. வடக்கே குரல்கள் வலுத்தன. உரோமைக்கு கடிதங்கள் பறந்தன. மாகாணப் பிரிவுக்கு, இது நான்காவது தோற்றம்.

## பக்குவமடையாத் தலைவர்கள்

இப்படிப்பட்ட பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, நன்கே புரிந்து, இரு சாராரையும் மேசைக்கு அழைத்து, பிரச்சனைகளை தெளிவாக முன்வைத்து, வலிகளையும், நோவுகளையும், கோபங்களையும் வெளிப்படுத்தி, குணமாகி, பிரச்சினைகளை இரு சாராரும் ஏற்கும் வண்ணம் செயற்படுத்துவது தலைமைச் செயலகத்துக்கு முடியாமல் போனது கவலைக்குரியது. அந்த முதிர்ச்சியும், அதற்குரிய திறன்களையும் (skills) அவர்கள் தம்மில் வளர்க்கவில்லை. இன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

உரோமில் உள்ள தலைமைச் செயலகத்திலிருந்து வந்தவர், 'பிரிந்து போகட்டும்' என்ற மனோநிலையில் மாகாணத்தைப் பிரித்தார்கள். 23.08.1989 இல் யாழ். அமதிகள் ஒரு துணை மாகாணமாக உருவாகினார்கள். துணை மாகாணத்தின் முதல்வராக அருட்திரு. லூயி பொன்னையா, அ.ம.தி. அவர்கள் நியமனம் பெற்றார். முழுமையான பிரிவுக்கு முன் தோன்றிய ஐந்தாவது தோற்றம்.

## வடக்கும் கிழக்குமா?

பிரிவினையின் பொழுது தமிழர் செறிந்து வாழும் வடகிழக்கு மாகாணங்களை ஒன்றாக்கி ஒரு மாகாணமாக்க யாழ். அமதிகள் விரும்பினார்கள். வடகிழக்கை ஒன்றாக்குவதை தென்னகச் சிங்களம் பேசும் அமதிகள் முழுமூச்சாக எதிர்த்தார்கள். காரணத்தையும் முன் வைத்தனர்.

தமிழரசு கட்சியும், பெரும்பான்மையான தமிழர்களும் வடகிழக்கை இணைத்து 'தமிழர் தாயகம்' என்று உரிமைகோரி வாதாடி வந்தமையினாலேயே போர் மூளக் காரணமாயிற்று. அதனால், வடகிழக்கை இணைத்து ஒரு மாகாணத்தை அமதிகள் உருவாக்குவது இன்றைய (அன்றைய) அரசியல் சூழலுக்கு ஒத்துவராது. நாங்கள் (அமதிகள்) ஒரு முன்னுதாரணமாகி (precedent) விடுவோம். இத்துடன் வடகிழக்குக் கோரிக்கை மௌனிக்கப்பட்டது.

ஒரு துறவற சபை மேய்ப்புப்பணி நோக்கியும், நிர்வாகத் திறன் நோக்கியும், ஒரு மாகாணத்தைப் பிறப்பிக்காமல், நாட்டின் இனவாத அரசியலால் கட்டுண்டு, அரசின் சிந்தனையை உள்வாங்கி, சிந்தித்ததும் செயற்பட்டதும் மிகக் கவலைக்குரியது. இதை உணரத் தவறிய தலைமைச் செயலகமும் ஒத்தூதியது அவர்களின் ஆன்மீக வறுமையைக் காட்டியது. துறவறத்தினுள் சமயசார்பற்ற தன்மை (secularism) புகுந்துவிட்டது. சமயத்தைப் பற்றிய எந்த சிந்தனையுமின்றி,

சமயசார்பற்று வாழ்வது ஒரு பக்கம், ஆனால் சமயத்தினுள் வாழ்ந்து, சமயத்தை வாழ்ந்து சமய சார்பற்ற முடிவுகளை எடுப்பது இன்னொன்று.

## கலந்துரையாடல்

அமதிகள் எல்லோரினதும் கருத்துக்களை அறிந்துதான் மாகாணம் பிரிந்ததென்று சொல்கின்றார்கள். இது, உண்மையா? இந்த 'எல்லோரும்' யார்? முழு மாகாணத்திலுமுள்ள அமதிகளா அன்றேல் யாழ். அமதிகள் மட்டுந்தானா? எதுவாக இருப்பினும், நான் அந்த 'எல்லோர்' பட்டியலில் இணைக்கப்படவில்லை. என்னையும் எனது கருத்தையும் உள்வாங்கவில்லை என்ற ஒரே ஒரு காரணத்தினால், எல்லோரையும் கலந்துரையாடவில்லை என்பது எனது வாதமல்ல. யாழ். அமதிகளுள் ஒருவர் இந்தப் பிரிவினையை ஆரம்பத்தில் இருந்தே வெளிப்படையாக எதிர்த்தவர். அவருடைய கருத்து உள்வாங்கப்பட்டதா?

என்னைக் கலந்துரையாடாமைக்கு இன்னுமோர் காரணத்தை முன் வைக்கலாம். இந்தப் பிரிவினையை எதிர்த்தும் ஆதரித்தும் பேசிய காலத்தில் நான் வடஅமெரிக்காவில் 'அஞ்ஞா' வாசமிருந்தேன். அதற்கு அரசியல்தான் முழுக் காரணம். இதையிட்டு விரிவாக எனது, "மாறிய எனது பாதை, மாற்றியவர் யாரோ" என்ற நூலில் (2024) எழுதியுள்ளேன்.

நான் நாட்டைவிட்டு வெளியேறிய காரணத்தைப் பல சிங்களம் பேசும் அமதிகள் திரிவுபடுத்தி விளங்கிக் கொண்டார்கள். இந்தத் திரிபு உரோமையிலுள்ள தலைமைச் செயலகத்திற்கும் சென்றது. அதனால், அன்று தொட்டு இன்றுவரை தலைமைச் செயலகம் என்னை 'ஓர் அந்நியனா கவே' பார்த்து வந்தமையை நான் அறிவேன்.

## எனது மடல்

வடஅமெரிக்காவில் தற்காலிகமாக வாழ்ந்த எனது செவிகளுக்கு மாகாணப் பிரிவினை பற்றிய செய்தி கிடைத்தது. ஆழ்ந்த சிந்தனையின் பின்னர், தலைமைச் செயலகத்திற்கு ஒரு மடல் வரைந்தேன்.

மடலின் சாரம்: வடகிழக்கு மாகாணமாக ஒரு புதிய மாகாணத்தைப் பிறப்பிப்பது நல்லது. இதைச் சில வருடங்களுக்கு முன்னர் செய்திருக்க வேண்டும். போரின் பொழுது மொழிவாரியாகவும் இனவாரியாகவும் பிரிப்பது ஆரோக்கியமாக எனக்குத் தோன்றவில்லை. இதன் விளைவுகளையும் நாம் முன்கூட்டிப் பார்ப்பது நலம். அத்துடன் தலைமைத்துவத் தலைமுறை ஒன்று இந்தியா, பாகிஸ்தான், பங்களதேஸ் என்று பணிநோக்கிச் சென்றுவிட்டனர். இந்தத் தலைமுறை இடைவெளியும் மாகாணத்தைப் பாதிக்கும். அதனால், இந்தப் பிரிவினையைத் தள்ளிப்போடுவது நலமென எண்ணுகின்றேன். வழமைபோல எனது மடலுக்கு எப்பதிலும் கிடைக்கவில்லை. ஓர் ஒப்புதல் மடல் கூட எனக்கு வரவில்லை. இது, அவர்களது பண்பு.

## பிறப்பிக்கப்படவில்லை. பிரிக்கப்பட்டது.

*19.06.1991* வடமாகாணம் ஒரு தனி மாகாணமாகப் பிரிந்தது. இப்பிரிவு பெரும்பாலும் ஒரு மொழிவாரியான பிரிவாகவே அமைந்தது. அமதிகள் ஸ்ரீலங்கா மாகாணத்தில் எங்கெங்கு பணிபுரிகின்றார்களோ, அவர்கள் அந்தப் பணிபுரியும் இடங்களை உள்வாங்கின மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். இது ஒரு சட்டமாகப் பிரகடனப்படுத்தாவிட்டாலும் ஓர் ஒழுங்கு முறையாகக் கையாளப்பட்டது. வடக்கில் சிங்களம் பேசும் அமதிகள் யாருமே பணிபுரியவில்லை. ஆகவே, யாழ். மாகாணம் முழுக்க முழுக்க ஒரு தமிழ் பேசும் மாகாணமாயிற்று. ஒழுங்குமுறைக்கு ஒரு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது, விரும்பியவர்கள் எந்த மாகாணத்தில் பணிபுரிய விரும்புகின்றார்களோ, அவர்கள்

அந்த மாகாணத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு சேர்ந்தவர்களும் உண்டு.

## பயிற்றுவிக்கப்படாத மருத்துவிச்சி!

ஒரு துறவற சபையின் மாகாணம் வளர்ந்து வரும் நிலையில், பணியாளராலும் பணியாலும் வளர்ந்து வரும்பொழுது, சிறப்பான நிர்வாகம் நோக்கியும் மேய்ப்புப்பணியைச் சிறப்புறச் செய்வதை நோக்கியும், பணியாளரின் முழுமையான வளர்ச்சியை நோக்கியும் பொருளாதாரத்தில் ஓரளவு தன்நிறைவு உண்டா என்று பார்த்தும், இன்னோர் மாகாணத்தைப் பிறப்பிப்பது ஆரோக்கியமானது. அது பிரிவினையல்ல. இலங்கைத் தீவில் வடமாகாணம் பிறப்பிக்கப்படவில்லை. ஓர் உருவகத்தில் கூறுவதானால் இயல்பான பிரசவத்திற்கும் சத்திர சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுப்பதற்கும் உள்ள வித்தியாசம். வடமாகாணம் பிரிந்தமுறை, பிரிக்கப்பட்ட வழி இரு சாராரையும் பாதித்தது. பிறப்பிக்க வந்த பயிற்றுவிக்கப்படாத மருத்துவச்சி தனது தொழிலை செவ்வனே செய்யத் தவறிவிட்டாள். வந்தவர் தனக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் திரும்பினாள்! இருந்தவர்கள் வேதனைக்குட்பட்டார்கள்.

அருள்திரு கில்லேறியன் வேதநாயகம், அ.ம.தி. அவர்களின் முயற்சியினால் கட்டப்பட்டு, என்னால் பெயர் சூட்டப்பட்டு ‘தொடர்பகம்’ 1982 இல் ஆசீர்வதித்துத் திறக்கப்பட்டது. அப்பொழுது, எங்கள் மாகாணம் தோன்றியதையிட்டும் தொடர்பகத்துப் பணிகளையிட்டும் ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சேற்றி விநியோகம் செய்தோம். நான் மேற்கூறிய மாகாணம் பிரிந்த முறையை இதே உருவகத்துடன் எழுதியிருந்தேன். கொழும்பு மாகாணம் மகிழ்ச்சியுற்றார்கள் என்று சொல்வதற்கில்லை!

## பாகப் பிரிவினை

வடமாகாணம் பிரிக்கப்பட்டபொழுது, அருட்திரு Z.N.குரூஸ், அ.ம.தி. அவர்களின் முயற்சியால் யாழ். வாழ் முதிய அமதிகளுக்கு கட்டிய புதிய கட்டிடமான அமலோற்பவும், அருட்திரு கில்லேறியன் வேதநாயகம், அ.ம.தி. அவர்களுடைய முயற்சியால் கட்டப்பட்ட தொடர்பகமும், பழைய கட்டிடமொன்று புதிப்பிக்கப்பட்ட புனித வளனார் சிறிய குருமடமும் மட்டுந்தான் அமதிகளின் சொத்தாக இருந்தது. எவ்வளவு பணம் இருந்தது என்பது எனக்குத் தெரியாது! பெரும் பணம் இருக்க வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட பொருளாதார நிலையில்தான் மாகாணம் பிரிந்தது. தென்னந்தோப்புக்களோ, வாழைத் தோட்டங்களோ, நெல் விளையும் வயல்களோ வடமாகாணத்திடம் இருந்ததாகத் தெரியவில்லை.

மாறாக, தெற்கில் சில தேயிலைத் தோட்டங்களும், சில நிலப்பரப்புக்களும், இலாபம் தரும் தொழில்களும், ஒரு சில பங்குகளும், சிறிய பெரிய குருமடங்களும் கொழும்பு மாகாணத்தின் சொத்தாக இருந்தன. எவ்வளவு பணம் அவர்களிடம் இருந்தது என்பது எனக்குத் தெரியாது!

ஆகவே, பாகப்பிரிவினை நடந்தது. உரோமையிலிருந்து பொதுப் பொருளாளரும் (General Treasurer) வந்திருந்தார். சுருக்கமாகச் சொன்னால், இந்தப் பாகப் பிரிவினையின் பொழுது, வளர்ச்சி அடைந்த துறவிகளாகவோ, பண்புடைய வர்களாகவோ, பெருந்தன்மை கொண்டவர்களாகவோ முத்தரப்பினரும் நடந்து கொள்ளவில்லை. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய நிலைதான் மிஞ்சியது.

## போர்க்கால வலிகள்

மேற்கூறிய தலைப்பில் நான் பொதுவான போர்க்கால வலிகளை விபரிக்க முன்வரவில்லை. அவற்றை விரிவாகச் சொல்வதனால், ஒரு பெரிய நூலாக அது அமையும். வரலாற்று

ஆசிரியர்கள் யாராவது கட்டாயம் எழுத வேண்டும். இங்கு நான் குறிப்பிட விரும்புவது, அமதிகள் வடமாகாணமாகப் பிரிந்த பின்னணியில் ஏற்பட்ட சில வலிகள் மட்டும்.

போர்க்காலத்தில், ஒரு கட்டத்தில் யாழில் புலிகள் சந்தித்த தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல், தென்மராச்சித் தமிழர்களை கிளிநொச்சி நோக்கி விரட்டினர். புலிகள் செய்த பெரும் தவறுகளில் இதுவுமொன்று. மக்களோடு மக்களாக அமதிகளும் கிளிநொச்சி நோக்கிக் கடினமான ஒரு பயணத்தை அதுவும் கடும் மழையில் மேற்கொண்டனர். கிளிநொச்சியிலோ, வவுனியாவிலோ கால் வைக்கக் கூட அமதிகளுக்கு ஓர் இடமிருக்கவில்லை. அநாதைகளானோம். கொழும்பு மாகாணத்து அமதிகள், ‘வாருங்கள்’ என்றொரு வார்த்தை சொல்லவில்லை. எங்களுடன் வாழ்ந்த சிங்களம் பேசும் அமலமரித்தியாகிகள் எவருமே எங்களை ஏன் என்று கேட்கவில்லை. சந்திக்க வரவில்லை. உதவிக்கரம் நீட்டவில்லை. கருணைக்கரம் நீட்டவில்லை. ‘பிரிவைத்தானே கேட்டார்கள்! பிரிந்து வாழுங்கள்’ என்ற சொற்கள் கேட்டது. எனக்குக் கேட்டது.

## எனது வலி

ஒருமுறை அந்த மிகக் கடினமான, ஆபத்தான பயணமொன்றை நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மேற்கொண்டேன். எத்தனை சோதனைச் சாவடிகள். புலிகளும் இராணுவத்தினருக்கு ஈடாக தங்கள் கட்டுப்பாட்டுகள் இருந்த இடங்களில் சோதனைச் சாவடிகள் வைத்திருந்தார்கள். மிகுந்த களைப்புடன் நான் மட்டக்குளியாவில் உள்ள கொழும்பு மாகாணத் தலைமை செயலகத்தை அடைந்தேன். ஓர் அறையைத் தந்தார்கள். நான் அங்கிருந்த வேளை, இரு சிங்களம் பேசும் அமதிகள் வெளியே பேசிக் கொண்டார்கள். நான் எனது அறையினுள் இருந்தேன். “இவர்களெல்லாம் ஏன் இங்கு வருகின்றார்கள்? இவர்கள்தான் பிரிந்து போக

விரும்பினார்கள்.'' வலித்தது. ஒரே மாகாணமாக இருந்த பொழுது, சிங்களம் பேசும் பல அமதிகளுடன் நவசந்நியாசம் செய்து, ஏழு வருடங்கள் ஒன்றாகப் படித்து, பல வருடங்கள் கொழும்பில் பணிபுரிந்து, கொழும்பு மாகாணத்திற்கும் எனது பங்களிப்பைச் செய்து வந்ததை எல்லாம் மறந்து இவ்வாறு கூறினார்கள்! இன்னும் பல கசப்பான அனுபவங்கள், நான் அங்கு ஒரு வேண்டாத விருந்தாளி என்பதைப் புரிந்து கொண்டேன். புரிய வைத்தார்கள். பின்னர் அங்கு செல்வதை நிறுத்திக் கொண்டேன்.

**ஒரு நாட்டிலா?**

வட அமதிகளின் மாகாண முதல்வராய் தெரிந்தபொழுது, புதிய முதல்வர்கள் (அனைத்துலக ரீதியாக) உரோமைக்கு ஒரு பயிற்சிக்காக அழைக்கப்பட்டபொழுது, எனக்கும் அழைப்பு வந்தது. அதே அழைப்பு கொழும்பு அமதிகள் மாகாண முதல்வருக்கும் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் பங்குகொள்ளும் அனைத்து அமதி முதல்வர்களும் தங்கள் தங்கள் மாகாணங்களையிட்டு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப் பணிக்கப்பட்டோம். கொழும்பு மாகாணமுதல்வர் எழுதிக் கொண்டுவந்த அறிக்கையைப் படித்தார். அந்த அறிக்கையின் படி நாட்டு நிலைமை பற்றி ஒரு வரிதானும் எழுதப்படவில்லை. மாறாக, எனது நேரம் வந்தபொழுது நான் ஒலி, ஒளி வடிவில் வடகிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் போரைச் சித்தரித்தேன். படங்கள் உரக்கப் பேசும். இந்த இரு அறிக்கைகளையும் கேட்டபொழுது, கனடாவில் இருந்து வருகை தந்த மாகாண முதல்வர் எல்லோர் முன்னிலையிலும் ஒரு கேள்வி கேட்டார். "நீங்கள் இருவரும் ஒரே நாட்டில் இருந்துதான் வந்திருக்கின்றீர்களா? Are you both from the same country?'' அந்த ஒரு கேள்வி போதுமானது.

### அயலவன் அந்நியனானான்

நான் எனது பணிக்காக வெளிநாடுகள் செல்வதுண்டு. அப்பொழுதெல்லாம் கொழும்பில் தங்கிச் செல்லவும், தங்கி வரவும் ஓர் இடம் தேவைப்பட்டது.

அப்பொழுது நான் எதிர்பாராத ஒரு நிகழ்வு நடந்தது. சதாசகாய மாதாவின் சகோதரிகள் பெரியமுள்ளையில் தங்கள் தலைமைச் செயலகத்தை நிறுவியிருந்தனர். சிறிய சபை. சபையினர் அனைவருமே சிங்களம் பேசுவோர். தஞ்சம் தந்தார்கள். அவர்களை நன்றியோடு இவ்விடத்தே நினைவுகூருகின்றேன். நானும் அவர்களுக்கு என் சேவையைச் செய்துள்ளேன். அயலவன் அந்நியனானான். அந்நியன் அயலவனானான். இயேசு கூறிய நல்ல சமாரித்தன் உவமை ஞாபகம் வருகின்றது.

இன்றைக்கும் உரோமைத் தலைமைச் செயலகத்திற்கு நான் அந்நியன்தான். ‘இவன் இப்படித்தான்’ என்ற ஒரு முத்திரையிட்டு, அந்த ‘இவனை’ ஒரு சிறிய பெட்டிக்குள் அடைத்துக் காலமெல்லாம் அவனாகிய இவனைப் பார்ப்பது மனிதரிடையே உள்ள ஒரு பொதுவான பலவீனந்தானே? நாம் மட்டும் என்ன விதிவிலக்கா? அவ்வாறு விதிவிலக்காக இருந்தால், பழையவனைப் புதிய கண்கொண்டு பார்க்கவும், புதியவனை வளர்த்துவிட்ட அந்தப் பழையவனை புதியவனாகவே பார்க்க ஒரு மனித வளர்ச்சி வேண்டும். என்னை ஒரு விதிவிலக்காக நான் பார்க்கவில்லை.

### பிரிவின் பின் பிரிவு

யாழ். மாகாணம் பிரிந்த பின்னர், ஒரு சில அமதிகள், அமதிகளின் பெரிய குருமடத்தை (Scholasticate) யாழில் ஆரம்பிக்க வேண்டும் என்ற குரலை எழுப்பினர். இவர்களின் குரல் விரிவடையாவிட்டாலும், இக்குழுவினர் சிலரின் செல்வாக்கால், இறையியல் மாணவர்களை கொழும்புத்துறை

‘வசந்தகம்’ என்ற ஒரு புதிய கட்டிடத்திற்கு 1997 இல் கொண்டு வந்தார்கள். இப்பிரிவையிட்டும் பிரிவுக்குத் தந்த காரணங்களையிட்டும் இங்கு எழுத வேண்டிய அவசியம் எனக்குத் தோன்றவில்லை. கொழும்பு மாகாணம் மகிழ்வோடு பிரிந்தார்கள் அல்லது பிரித்தார்கள் என்று சொல்வதற்கில்லை. “சூழலில்” (contextual) உருவாக்கம் என்ற ஒரு காரணம் முன்நிலைப்படுத்தப்பட்டாலும், இன்று வரை நான் அதைப் பார்க்கவில்லை.

## வலிகளும், சுமைகளும், நோவுகளும்

தமிழின ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டாலும், அவற்றின் வடுக்கள் இன்னமும் ஆறாத புண்களாக இருக்கின்றன.

அதேபோன்று, கொழும்பு – யாழ். மாகாணங்களாக அமதிகள் பிரிந்து 35 வருடங்களாகியும், இன்னமும் இரு சாராரிடையேயும் வலிகளும், மனச்சுமைகளும், நோவுகளும், கோபங்களும் நீறுபூத்த நெருப்பாக உண்டென்பது எனது கருத்து. இக்கருத்து தவறென ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால், மகிழ்வதில் நான்தான் முதலிடம் வகிப்பேன். எனது கருத்தில் உண்மை உண்டென்றால், அமதிகளின் சபை உரோமால் அங்கீகரிக்கப்பட்டு 200 ஆண்டுகளைப் பூர்த்தி செய்ததற்கு விழா எடுக்கும் இவ்வேளையில் நடுவுநிலைமை வகிக்கக்கூடிய ஒருவரையோ இருவரையோ அழைத்து எங்கள் வலிகள், நோவுகள், சுமைகள், கோபங்களை வெளிக்கொணர்ந்து, மன்னித்து ஒப்புரவாகி அயலவனாக இருந்து அந்நியனானவனை மீண்டும் அயலவனாக ஏற்றுக்கொள்ள ஏன் முடியாது?

பின்னர், குணப்படுத்த முடியாதென்று இருப்பன வெகுசில, ஆனால், வராமல் தடுக்கக்கூடியன பல, என்று உளவியலாளர் எறிக் எறிக்ஷன் கூறினார்.

**பி.கு.**

விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து, ஒரு வரலாறாக இக்கட்டுரை எழுதப்படவில்லை. மாறாக, ‘அந்த நாள் ஞாபகம் இன்றுதான் வந்ததோ’’ என்ற பாடல் வரிக்கேற்பவும், ‘‘நினைவுகள் சாவதில்லை’’ என்று ஆங்கிலக் கவிஞன் ஜோன் கீற்சின் கூற்றுக்கேற்பவும் நினைவுகளை மீட்டு எழுதப்பட்டது. பின்னால் வரும் வரலாற்று ஆசிரியர்கள் ஆய்வு வழி நின்று எழுதுவார்கள், எழுத வேண்டுமென்று அழைத்து நிற்கின்றேன். அதேவேளை, ஆய்வுசெய்து எழுதும் வரலாறுகள் பெரும் பாலும் நிகழ்வுகளையும், திகதிகளையும் முன்வைத்து எழுதுவார்கள். அந்த நிகழ்வுகளால் வரும் மனித உணர்வுகளைப் பெரிதும் கோடிட்டுக் காட்டமாட்டார்கள்.

இன்னுமோர் குறிப்பு: Oblates of Mary Immaculate என்ற பெயரை மாசற்ற மரியாளின் தியாகிகள் (மா.ம.தி.) என்று பெரும் தமிழ்க் குருக்கள் (அருள்திரு பாவிலுப்பிள்ளை, மா.ம.தி.யும், அருள்திரு இம்மானுவேல், மா.ம.தி.யும்) எழுதி வந்தார்கள். நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான் போன்று அன்று சிறியவனான நான் கூறினேன். மா.ம.தி. அவ்வளவு அழகல்ல, மாறாக அ.ம.தி. என்று பெயரிடுவோம் என்று கொஞ்சம் அடம் பிடித்தேன். பெரிய மனிதர்கள் விட்டுத் தந்தார்கள். நன்றி.